**கும்பகோணம் சரக கூட்டுறவுச் சங்கங்களின் துணைப்பதிவாளர் அவர்களின் செயல்முறை ஆணை**

-----

பிறப்பிப்பவர் : **செல்வி.தி.அட்சயப்பிரியா,பி.டெக்.,எம்.இ,**
**துணைப்பதிவாளர்,**
**கும்பகோணம்.**

-------

ந.க. 2875/2021/ப.தொ.

**நாள் : 10 .11.2021**

பொருள் : பணியமைப்பு - துணைப்பதிவாளர் அலுவலகம் கும்பகோணம் - தமிழ்நாடு அமைச்சுப்பணி 2018 -19, 2019-20ம் ஆண்டுகளுக்கான தொகுதி 4-ன் கீழ் நேரடி நியமனம் இளநிலை உதவியாளர்கள் திரு.எம்.பாரதிராஜா இளநிலை உதவியாளராக பணியமர்த்தம் செய்யப்பட்டது - பணியில் சேர்ந்தது - பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

பார்வை :
1) கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அலுவலக இணைப்பதிவாளர் (நிதி மற்றும் வங்கியியல்) அவர்களின் செயல்முறை ஆணை ந.க.11800/2020/ப.தொ. 3(2) நாள். 24.07.2020
2) தஞ்சாவூர் மண்டல கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.2632/2020/பதொ நாள். 30.07.2020.
3) கும்பகோணம் சரக கூட்டுறவுச் சங்கங்களின் துணைப்பதிவாளர் செயல்முறை ஆணை ந.க.2875/2020/ப.தொ. நாள்.31.07.2020.
4) திரு.எம்.பாரதிராஜா, இளநிலை உதவியாளர் பணிசேர் அறிக்கை நாள். 06.08.2020.

-------------

**ஆணை :**

தமிழ்நாடு அமைச்சுப் பணிகளில் அடங்கிய தொகுதி நான்கின் கீழ் 2018-19 மற்றும் 2019-20 ஆண்டுகளுக்கான காலிப்பணியிடங்களில் இளநிலை உதவியாளராக கூட்டுறவுத்துறையில் பணியமர்வு செய்ய தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, இளநிலை உதவியாளராக தற்காலிகமாக (Provisionally Selected) நியமனம் செய்யப்பட்டு, பார்வை (1)-ல் கண்டுள்ள செயல்முறை ஆணையின் வழியே தஞ்சாவூர் மண்டலத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை (2)-ல் காணும் மண்டல இணைப்பதிவாளர் செயல்முறை ஆணையின் வழியே கும்பகோணம் சரக கூட்டுறவுச் சங்கங்களின் துணைப்பதிவாளர் அலுவலகத்திற்கு மறு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை (3)ல் காணும் ஆணையின் படி காலியாக உள்ள "இளநிலை உதவியாளர் / தபால் அனுப்புகை பிரிவு" கும்பகோணம் சரக துணைப்பதிவாளர் அலுவலகத்தில் பணியமர்த்தம் செய்யப்பட்ட பார்வை (4)ல் காணும்படி திரு.எம்.பாரதிராஜா, இளநிலை உதவியாளர் 06.08.2020 முற்பகல் இப்பணியிடத்தில் சேர்ந்துள்ளார்.

2) பார்வை (1)-ல் கண்டுள்ள செயல்முறை ஆணையின் வழியே பணியமர்த்தம் செய்து ஆணையிடப்பட்டதை தொடர்ந்து இவ்வலுவலகத்தில் பணியில் சேர்ந்துள்ள இளநிலை உதவியாளர் அவருக்கு எதிரே குறிப்பிட்டுள்ள பணியில் சேர்ந்த நாள்முதல் மாண்பமை சென்னை/மதுரை கிளை உயர்நீதிமன்றத்தில் 2018-19 மற்றும் 2019-20ம் ஆண்டுகளுக்கான தொகுதி 4ல்

குறிப்பிட்ட பணிகளுக்கான நிலுவையில் உள்ள நீதிப்பேராணை மனுக்களின் இறுதி முடிவுக்கு உட்பட்ட நிபந்தனைக்குட்ப்பட்ட பணி வரன்முறை செய்யப்படுகிறது.

| வ.எண் | பணியாளரின் பெயர் மற்றும் பதவி (திருவாளர்) | பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|
| 1 | திரு.எம்.பாரதிராஜா, இளநிலை உதவியாளர் | 06.08.2020 முற்பகல் |

10/11/2021

துணைப்பதிவாளர்,
கும்பகோணம்.

10/11/2021

பெறுநர் :

திரு.எம்.பாரதிராஜா,
இளநிலை உதவியாளர் / தபால் அனுப்புகை பிரிவு உதவியாளர்,
துணைப்பதிவாளர் அலுவலகம்,
கும்பகோணம்.

நகல் :

1. மண்டல இணைப்பதிவாளர், தஞ்சாவூர்-க்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2. பணிப்பதிவேடு.
3. இருப்புகோப்பு - 2021.